# தவக்காலம் 3ஆம் வாரம் - ஞாயிறு

## முதல் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று தவக்காலத்தின் மூன்றாம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

"உலகம் ஒரு பொருட்டாகக் கருதுபவற்றை அழித்துவிட, அது தாழ்ந்ததாக கருதுபவற்றையும், இகழ்ந்து தள்ளுபவற்றையும் கடவுள் தேர்ந்தெடுத்தாh;" என்ற புனித பவுலின் இறைவார்த்தைக்கேற்ப, இறைமகன் இயேசுகிறிஸ்து, யூதர்கள் சமூகத்தில் புறக்கணித்த சமாரியர் பகுதிக்கு சென்று, அவ்வூரிலுள்ள பெண்ணிடம்," குடிக்கத் தண்ணீர் கொடும்" எனக் கேட்கின்றார். இந்த உரையாடல், பல ஆழமான உண்மைகளைத் தொடுகின்றது. சமாரியப் பெண்ணைப்பற்றி, தன்னைப்பற்றி, தந்தையாம் கடவுளைப்பற்றிய பல அற்புதமான உண்மைகள் இவை. புனித அகுஸ்தீனாரின் வரிகள்: " உயிர்தரும் உணவு, பசியை உணர்ந்தது: வாழ்வின் வழி, வழிநடந்து களைத்தது: உயிர்தரும் நீருற்று தாகம் கொண்டது. தாகம் தீர்க்கும் கிணற்றருகே, உயிர்தரும் நீருற்று காத்திருந்தது. இன்றைய நற்செய்தியில், மனிதர்கள் மீது நாம் சுமத்தும் பாகுபாடுகள், முத்திரைகள் எல்லாம் அழிக்கப்பட்டு, கீழ்தரமானவர் என்று முத்திரையிடப்பட்ட சமாரியப் பெண்ணை தன்னை அறிவிக்கும் நற்செய்தியாளராய் மாற்றும் அற்புதத்தைக் காண்கின்றோம்.

சமுதாயத்தின் ஓரத்தில் வாழ்ந்த ஒரு பெண் அந்த ஊரையே இயேசுவின் பாதம் கொண்டு வந்து சேர்த்த பெருமையைப் பெறுகின்றார். இறைவனைப் பற்றிப்பேச யாருக்குச் சிறிதும் தகுதியில்லை என இவ்வுலகம் ஒதுக்கி வைத்ததோ, அவர்களே இயேசுவை உலகறியச் செய்த தலைசிறந்த சாட்சிகளாயினர். " கட்டுவோர் புறக்கணித்த கல்லே கட்டடத்துக்கு மூலைக்கல் ஆயிற்று" எனற இறைவார்த்தையை இன்றைய நற்செய்தி நமக்கு மீண்டும் ஒருமுறை உணர்த்துகிறது. இலக்கணங்கள், வரம்புகள் தாண்டிய உண்மை இறைவனை கண்டுகொள்ளவும். பாகுபாடுகள், ஏற்றதாழ்வுகள் களைந்து, உயிருள்ள ஊற்றான இறைவனைப் பருகவும் இத்தவக்காலம் நமக்கு உதவிட அருள் வேண்டி, இக்கல்வாரிப் பலியில் பங்கெடுப்போம்.

## மன்றாட்டுக்கள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

1. “மனம் மாறி வாழ்வு பெறுங்கள்” என்றுரைத்த எம் இறைவா,

இத்தவக்காலத்தில், எங்கள் எண்ணங்கள், செயல்கள் அனைத்திலும் வெளிவேடத்தனமில்லாது, உம் ஆசீருக்கும், அருளுக்கும் எங்கள் பாவங்கள்; தடைக்கற்களாக இல்லாதவண்ணம், உள்ளத்தின் ஆழத்தில் எங்கள் பாவங்களை உணாந்தவர்களாக, உம்; அன்பிற்கும், இரக்கத்தையும் உணர்ந்தவர்களாக, எங்கள் வாழ்வை புதுப்பித்து, தூயதோர் உள்ளத்தை எங்களுக்குள் பெற்றவர்களாக, வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

2. “உனது ஆற்றலாலும் அல்ல, வலிமையாலும் அல்ல, எனது ஆவியாலே ஆகும்” என்றுரைத்த எம் இறைவா,

தங்கள் உடல் நோயினாலும், இன்னும் பல்வேறு சூழ்நிலைகளினாலும் இத்திருப்பலிக்கு வர இயலாத மாந்தர்களை உம்மிடம் அர்ப்பணிக்கின்றோம். அவர்கள் நோய்கள், வேதனைகள், மனப்பாரங்கள் அனைத்தினின்றும் அவர்களை விடுவித்து, உம் நற்கருணை பிரசன்னத்தை அவர்களுக்குக் கொடுத்து, அவர்களை வாழ்வித்து, அவர்கள் விரைவில் உம் சந்நிதானம் வந்து, திருப்பலியை காணும் பேற்றினை பெற்று, உமக்கு நன்றியறிந்த மக்களாக வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உமமை மன்றாடுகின்றோம்.

3. “தேவைக்கு மேல் உன்னிடம் உள்ளதையெல்லாம் தருமம் செய்துவிடு” என்றுரைத்த எம் இறைவா,

தங்கள் வாழ்வின் அடிப்படை வாழ்வாதாரங்களைக் கூட கிடைக்கப் பெறாத ஏழை, எளியவர்களை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். தங்கள் வளமான வாழ்வுக்காக, தங்களின் வருங்கால தலைமுறையினருக்காக அவற்றை சுயநலனுடன் சொந்தமாக்கிக் கொள்ளாது, ஏழைகளின் வறுமை நிலையை உணரும் கனிவுள்ள இதயமுள்ளவர்களாக, தங்களிடமுள்ளதை பகிர்ந்து, தருமங்கள் செய்பவர்களாக வாழ்ந்திட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

4. “நான் ஆள்பார்த்து செயல்படுவதில்லை” என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் ஏழை, பணக்காரர், சாதி, மதம், இனம் இவற்றை மனதில் வைத்து யாரையும் வெறுத்து, ஒதுக்காது அனைவரிலும் உம் சாயல், உயிர்மூச்சு இருக்கின்றது என்பதை உணர்ந்தவர்களாக, ஆள்பாராது, உயர்வு மனப்பான்மை கொள்ளாது, அனைவரையும் ஏற்று, நேசித்து, அன்பு செய்யும் பரந்த உள்ளத்தைப் பெற்றிட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

5. “உங்கள் கடவுளாகிய ஆண்டவர்மீது மட்டும் அன்பு கொள்வதில் மட்டும் கருத்தாயிருங்கள்” என்ற இறைவா,

எங்கள் வாழ்வில் துன்பங்கள், சோதனைகள், பிரச்சனைகள் வரும்போது, உண்மைக் கடவுளாகிய உம்மை மறந்தவர்களாக, மறுதலிப்பவர்களாக, பிற சபையை, வேற்றுத் தெய்வங்ளை நாடிச் சென்று, சகுனம், குறிபார்த்தல் போன்ற தவறான வழிகளில் எங்கள் உண்மையான கிறிஸ்தவ வாழ்வை தொலைத்து விடாது, உயிருள்ள உம் நற்கருணை பிரசன்னத்தின் மகிமையை உணர்ந்தவர்களாக, உம்மை மட்டுமே முழு இதயத்தோடு, முழு மனத்தோடு, முழு ஆற்றலோடு அன்பு செய்யக்கூடிய உள்ளத்தைப் பெற்றிட வரம் வேண்டி, இறைவா! உம்மை மன்றாடுகின்றோம்.

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com